Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி - 02 | 19-08-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 182




## இந்தியாவின் நலன் குறித்துப்பேச கதிர்காமருக்கு அருகதையில்லை!



### இரா. சம்பந்தன் தெரிவிப்பு

திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் குறித்தோ அல்லது இந்தியாவின் நலன் குறித்தோ பேசுவதற்கு லக்ஷ்மன் கதிர்காமருக்கு எத்தகைய அருகதையும் இல்லை என்றும் அவரின் இந்த நடவடிக்கை கேலிக்குரியது என்றும் தமிழர் கூட்டணியின் செயலாளர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் குறித்து யதார்த்த பூர்வமாக இதுவரையும் எந்தக் கருத்தையும் வெளியிடாத கதிர்காமர் இந்தியாவின் நலன் குறித்து அக்கறை கொள்வது வேடிக்கையானது என்றும் அமெரிக்காவுக்கு என

(08ஆம் பக்கம் பார்க்க)

## இ.நி. எதிராக போராட்டம் நடத்தும் ஜே.வி.பி.யினர் மீது பயமுறுத்தல்

### ஐ. தே. க. மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக தாம் மேற்கொண்டு வரும் நாடு தழுவிய பத்து நாள் எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அடியாட்கள் பயமுறுத்தல் விடுத்துள்ளதாக ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது. தமது இந்த எதிர்ப்புப் பிரச்சார நடவடிக்கையின் முன்னேற்றத்தைக் கண்டு ஐக்கிய தேசியக் கட்சியினர் வன்முறையில் இறங்கியுள்ளதாகவும் ஜே.வி.பி.யின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இரத்தினபுரிப் பிரதேசத்தில் ஜே.வி.பி. ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்புப் பிரச்சார இயக்கத்தில் கலந்து கொள்ளச் சென்றவர்களை இரத்தினபுரியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தியுள்ளார். இதேவேளை, பாத்துத்தும் புறப்பிரதேசத்தில் சமாஜவாரிச் சங்க மாணவர்கள் சிலரை

(08ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் விட்டுக்கொடுப்பின்மையால் மக்களின் அகதி வாழ்க்கை தொடர்கிறது

## நோர்வே கல்விமான்களிடம் செயலக அதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**அரச படையின் ஆக்கிரமிப்புக்களாலும், விட்டுக்கொடுக்காத தன்மைகளாலும் யாழ்.குடாநாட்டில் இன்றும் அகதி வாழ்க்கை தொடர்வதாக யாழ்.அரச செயலக அதிகாரிகளால் நோர்வே கல்விமான்கள் குழுவிற்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த நோர்வேயைச் சேர்ந்த பேராசிரியர் றூட் மற்றும் பேராசிரியர் கிறிஸ்ரின் நொக்கோ ஆகியோர் அடங்கிய ஆறுபேர் கொண்ட குழு மாலை 2.30 மணியளவில் யாழ். செயலகத்தில் வைத்து மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா மற்றும் யாழ்மாவட்டத் திட்டப் பணிப்பாளர் சுந்தரம் பிள்ளை ஆகியோர் உட்பட பல அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடிய போது இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்போது கடந்த 20 ஆண்டுகளாக இடம்பெயர்ந்து அவதிப்பட்டு மீண்டும் யாழ். மண்திரும்பியும் தமது சொந்த வீட்டில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் இவர்களுக்கு அரசால் கொடுக்கப்படும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நாளை கொழும்பிலிருந்து பாரிஸ் புறப்படுவர்

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக சட்டவல்லுனர்களுடன் ஆராயவென அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் இன்று பாரிசுக்குப் புறப்படும் குழுவில் மூத்த தளபதி கேணல் கருணா, விடுதலைப்புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோர்ஜ் மகேஸ்வரன், விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் உட்பட 10 பேர் இடம்பெறுகின்றனர்.

இவர்கள் நாளை கொழும்பிலிருந்து பாரிசுக்குப் புறப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. ஏனைய

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி.யினருக்கு நெடுந்தீவில் மக்கள் கறுப்புக்கொடி எதிர்ப்பு

### கடையடைப்பும் இடம்பெற்றது

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிக்கு இரண்டு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் சென்றதனால் அங்கு மக்கள் கறுப்புக் கொடிகளைக் கட்டி எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். நேற்று முன் தினம் ஈ.பி.டி.பி உறுப்பினர்களான நெப்போலியன், நிசாந்தன் ஆகிய இரு உறுப்பினர்களும் நெடுந்தீவிற்கு வந்ததையடுத்து அங்குள்ள மக்கள் கடையடைப்புச் செய்ததோடு, வீதிகளில் கறுப்புக்கொடிகளைக் கட்டி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதனால் அங்கு சென்ற இரு ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் நான்கு மணி நேரத்தின் பின்னர் திரும்பிச் சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ். மடம் வீதிச் சந்திக் காவலரண் அருகே மதகொன்றில் இருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

யாழ். மடம் வீதிச் சந்தியிலுள்ள மதகு ஒன்றிலிருந்து நேற்றுக்காலை வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது யாழ்ப்பாணம் 5 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த அருமை என்று அழைக்கப்படும் என். றொனால்ட் (வயது-61) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது. திருமறைக் கலாமன்றத்தின் இரவுக் காவலாளியாகிய இவரின் தலையில் பலத்த காயம் ஒன்று காணப்படுகிறது. இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பொலிசார் அட்டகாசம்

யாழ். பண்டத்தரிப்புப் பகுதியில் பொலிசார் சிலர் விஷமிகளுடன் இணைந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுவருவதால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். பண்டத்தரிப்பு சந்தைக்கு எதிரிலுள்ள மதுபானக்கடை ஒன்றில் சில விஷமிகளுடன் இணைந்து மதுபானம் அருந்தும் பொலிசார் இரவு வேளைகளில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## எதிர் வரும் 1-ம் திகதி முதல் மண்ணெய்க்கு தீர்வை நீக்கம்

மண்ணெய் மீது அறவிடப்பட்ட ஆயத்தீர்வை 01.09.2003 ஆம் நாளிலிருந்து முற்றாக நீக்கப்படுகிறது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் வவுனியா,மன்னார் மாவட்டங்களில் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளிலும் மண்ணெய்யின் ஆகக் கூடிய சில்லறை விலை ஓர் இலீற்றருக்கு 28 உருபாவாகும். இக் கட்டுப்பாட்டு விலை 01.09.2003 ஆம் நாளிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும். கட்டுப்பாட்டு விலைக்கமைவாக மண்ணெய்யை விற்பனை செய்யுமாறு வணிகரை நிதித்துறை வேண்டுகின்றது.

## எழுதுமட்டுவாள் முன்னரங்கப் பகுதியில் சூட்டுக் காயத்துடன் சிப்பாயின் சடலம் மீட்பு

எழுதுமட்டுவாள் முன்னரங்கப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சிப்பாய் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிறு முன்னரங்கப் பாதுகாப்பு அரண் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் ஒன்று கேட்டது. இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த படையினர் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சிப்பாய் ஒருவரின் சடலத்தை மீட்டனர். இது ஆராச

(08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் செயலகம்

(வவுனியா)

பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுச் செயலகம் ஒன்று வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஏற்பாட்டுக் குழுச் செயலகம் வவுனியா இந்து இளைஞர் பேரவைக் கட்டடத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இச்செயலகம் பொங்குதமிழ் தொடர்பான ஒழுங்குபடுத்தலுக்காகத் திறந்து வைக்கப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண நிலை குறித்து ஆராய ரணிலைச் சந்திக்க ஹக்கீம் முடிவு

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக சிறிலங்காப் பிரதமருடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவருமான ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார். அத்துடன் இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். கடந்த சில தினங்களாக திருகோணமலை மூதூர்ப் பகுதிக்கு நேரில் சென்று அவதானித்த பின்னர் ஹக்கீம் இம் முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேசவுள்ளதாகவும் ஹக்கீம் கூறியுள்ளார்.

## இரு முஸ்லிம் விவசாயிகள் வங்களாவடியில் சடலமாக மீட்பு

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த வங்களாவடி வயற் பகுதியில் திங்கள் காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரண்டு விவசாயிகள் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இறந்தவர்கள் சம்மாந்துறையைச் சேர்ந்த 45 வயதுடைய ஆதம் பாவா இப்ராலெப்பை, 28 வயதுடைய இஸ்ராகிம் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஞாயிறு மாலை வயலுக்குச் சென்ற இவர்கள் வீடு திரும்பவில்லை. நேற்றுக் காலை வயலுக்குச் சென்ற விவசாயிகள் மேற்படி இருவரும் சடலமாகக் காணப்பட்டதைக் கண்டு தகவல் கொடுத்ததையடுத்து பொலிசார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்மாந்துறைப் பிரதான வீதியிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் வயல் பிரதேசத்தில் சடலங்கள் காணப்பட்டன. மோட்டார் சைக்கிளில் இரவில் வீதியூடாக வந்து கொண்டிருந்த வேளையிலேயே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களது நெஞ்சிலும், வயிற்றிலும் சூட்டுக்

(08ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் விவசாயிகள் கொலைக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

சம்மாந்துறையில் இரண்டு முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புபடுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சில அரசியல் வாதிகள் குற்றம் சாட்டினர். இதனையடுத்து தமிழீழ மட்டு அம்பாறை மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தயிலீபன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இச்சம்பவத்துடன் புலிகளைத் தொடர்புபடுத்தி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருப்பது கண்டனத்துக்குரியது. தமிழ் முஸ்லிம் மக்களின் உறவைச் சகிக்க முடியாத சமாதானத்தை விரும்பாத தீயசக்திகளே இச்சம்பவத்துக்குப் பொறுப்பு என்று தெரிவித்துள்ள புலிகள், படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனவே இது குறித்து உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகள் யார் என்பது வெளிப்படுத்தப்பட

(08ஆம் பக்கம் பார்க்க)

# கிளி. மாவட்ட மருத்துவமனைகளில் வைத்தியர்கள், தாதியர் பற்றாக்குறை

## - எக்ஸ் கதிர் இயக்குநர் எவருமில்லை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவரும் வைத்தியசாலைகளில் பெரும் ஆளணிப்பற்றாக்குறை நிலவிவருகின்ற பொழுதிலும் இதுவரை இவ் ஆளணிப் பற்றாக் குறையினை நிவர்த்தி செய்வதற்கு சுகாதார அமைச்சு எதுவித நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லையென தெரியவருகின்றது.

இம்மாவட்ட வைத்தியசாலைகளில் எழுபது வீத வைத்திய அதிகாரிகள், ஐம்பது வீத பல்வைத்தியர்கள், அறுபத்தைந்து வீத உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள், எழுபத்தைந்து தாதியர்கள், எண்பது வீத மருந்தாளர்கள், ஐம்பது வீத இரசாயன பரிசோதர்களுக்கான வெற்றிடங்கள் நிலவிவருகிறது. கதிர் இயக்க (X-RAY) இயக்குநர் எவரும் இங்கில்லை.

அத்துடன் நான்கு பிரதேசசெயலர் பிரிவுகளில் எழுபத்தைந்து வீத சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் , நாற்பது வீத பொது சுகாதார மருத்துவ மாதுகளுக்கும், ஐம்பது வீத பொது சுகாதார பரிசோதகர்களுக்கான வெற்றிடமும் நிலவி வருகின்றது.

கிளி. மாவட்டத்தில் மாவட்ட வைத்தியசாலை உட்பட, மூன்று சுற்றயல் கூறு மருத்துவமனைகள், நான்கு மருந்தகம், மகப்பேற்று மனைகள், ஐந்து மத்திய மருந்தகங்கள் உட்பட 14 வைத்தியசாலைகளிலேயே கடந்த பல வருடங்களாக இவ் ஆளணிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதென கிளி. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.


## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

வேலும் மயிலும் சுபேசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கடந்த 27.07.2003 அன்று புளியங்குளத்திற்கும் கிளிநொச்சிக்குமிடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (3650)


## சுவருடன் மோதிய பார ஊர்தி

இரவில் பார ஊர்தி மோதியதில் வவுனியா வடக்கு கூட்டுறவுச் சங்க திருமுறிகண்டி கிளைக் கட்டடத்தின் முன்சுவர் இடிந்து நொருங்கியது. பார ஊர்தி தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது. இது சம்பந்தமாக இன்று கிளிநொச்சி தமிழீழ காவல்துறையினர் புலன்விசாரணை செய்துள்ளனர். . (09)

## சட்டவிரோதமாகப் பயணித்த 21 பேர் பொலிசாரால் கைது

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாகப்பயணம்செய்யவிருந்த 21 பேர் சிறிலங்காப் பொலிசாரால் திருகோணமலையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் நீர்கொழும்பு, வத்தளை, ஜா எல, வென்னப்புவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் இவர்களைப் பொலிசார் விளக்கமறியலிலும் வைத்துள்ளனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக படகு பயணம் செய்ய முடியாத நிலையிலேயே படகு பொலிசாரால் கைப்பற்றப்பட்டதுடன், சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை அழைத்துச் சென்ற நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## - யாழ்.மாவட்டத்தில் -

## யுத்தகாலத்தில் பேருந்துகளை இழந்த தனியாருக்குப் புதியவை வழங்கல்

யுத்த காலத்தின் போது வட பகுதியில் பயணிகள் பேருந்துகளை இழந்து நஷ்டஈடு பெறாத தனியார் உரிமையாளர்களுக்கு அரசாங்கம் பேருந்துகளை வழங்க முடிவு செய்திருப்பதாக சிறிலங்கா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ண நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கென 20 பேருந்துகள் கிடைத்துள்ளன. இவற்றை யாழ். மாவட்ட தனியார் பேருந்துக் கம்பனி ஊடாக உரியவர்களுக்கு கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

யாழ். மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் கம்பனி யுத்த காலத்தில் பேருந்துகளை இழந்து நஷ்டஈடு பெறாதவர்களின் தகவல், விபரங்களை வழங்கி உறுதிப்படுத்தியவுடன், மேற்படி பேருந்துகளை இலவசமாக பெற்றுக்கொள்வார்கள் என்று தெரிவித்துள்ளார்

## கிளி.மக்கள் வங்கிக்கிளை புதிய இடத்தில் திறப்பு

கிளிநொச்சி மக்கள் வங்கி நேற்று முதல் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் அருகாமையிலுள்ள எம்.எம்.பி. கட்டடத்தில் தனது சேவையினை தொலைநகல் (பக்ஸ்) வசதியுடன் ஆரம்பித்துள்ளது.கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு வங்கிச் சேவையினை ஆரம்பித்து வைத்தார்.கிளி. மக்கள்வங்கி



முகாமையாளர் பாலராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மக்கள்வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் எம்.கே.சிவபாதவிருதயர், கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன்.நித்தியானந்தன், மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள், வர்த்தக சங்கத்தினர், வர்த்தகர்கள் கலந்து சிறப்பித்தனர்.மேற்படி வங்கியில் சிறுவர் சேமிப்பு சிசுதான கணக்கினை மேற்கொண்டுள்ள 160 சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இதுவரை காலமும் இவ்வங்கியின் சேவை மாவட்ட அரச செயலகத்திற்கு முன்பாக உள்ள கட்டடத்தில் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கல்வி டிப்ளோமா வகுப்புகள் ஆரம்பம்

முல்லைத்தீவு நிலையத்தில் பயிலும் பட்டப் பின் படிப்பு கல்வி டிப்ளோமா (பகுதி - II) இரண்டாம் ஆண்டுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும். பகுதி - I பரீட்சைக்கு அண்மையில் தோற்றிய ஆசிரிய மாணவர்கள் அனைவரையும் தவறாது உரிய நேரத்திற்குச் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவணபவன் கேட்டுக் கொள்கின்றார். (26)


## கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலக திட்டப் பணிப்பாளர் விடுதி அமைத்தலுக்கான கேள்விகள் கிளிநொச்சி மாவட்டச் செயலக கேள்விச் சபையால் கோரப்படுகின்றது. இது சம்பந்தமான விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி முடிவுத் திகதி : **05-09-2003**

**தி. இராசநாயகம்,**
அரசாங்க அதிபரும்,
கேள்விச்சபைத் தலைவரும். (சி-8463)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

கிளி/வட்டக்கச்சி ம.வி. முன்னைநாள் ஆசிரியரும், சாரணர் குழுத்தலைவருமாய் சிறப்பாகப் பணியாற்றி நிப்பிரன் நாட்டில் எமது மாவட்டச் சாரணர் பெருமையை நிலைநாட்டிய தற்போதைய கிளிநொச்சி மாவட்டக் கௌரவ சாரண ஆணையாளர் உயர்திரு.எம்.புவனேந்திரன் அவர்களுக்கு அன்னாரது சாரணர் சேவையைப் பாராட்டி இஸ்பெயின் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவித்தமையை பெருமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.

*மேலதிக சாரண உதவி மாவட்ட ஆணையாளரும், சாரணர்களும். கிளிநொச்சி வலயம்.* (சி-8464)

*வலயக்கல்விப் பணிப்பாளரும், வலயக்கல்விப் பணிமனை அலுவலர்களும், பணியாளர்களும், கிளிநொச்சி.*



## இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் - கிளிநொச்சி மாவட்டக் கிளை

## பதவி வெற்றிடம்

**பதவி:** கணினிப் பயிற்சி போதனாசிரியர்

**காலம்:** 03 மாதங்கள்

**தகைமை:** 01) அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
02) அனுபவச் சான்றிதழ்கள்

**சம்பளம்:** நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

**விண்ணப்ப கடைசித்திகதி: 23.08.2003**

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

தலைவர்,
இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம்,
கிளிநொச்சி.

நேர்முகப் பரீட்சைத் திகதி தகுதியுடைய விண்ணப்பதாரிகட்கு கடிதமூலம் அறிவிக்கப்படும்.

தகவல்:-
க.கணேஸ்,
கௌரவ செயலாளர்,
இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம்,
கிளி.மாவட்டக்கிளை.

(சி-8465)


## திலீபன் மருத்துவ சேவையினரால் 16307 பேருக்கு சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சுகாதார சேவைகளின் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் இம் மாதம் 16307 பேருக்கு மருத்துவசிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மருத்துவமனையின் நெடுந்தீவு, ஆழியவளை, பூநகரி, அடம்பன், அளம்பில், ஐயன்கன்குளம்,மாங்குளம்,கற்சிலைமடு, புளியங்குளம், நயினாமடு ஆகிய பத்து மருத்துவ நிலையங்களிலும் இம் மாதம் வைரஸ் காய்ச்சலுக்கு 1902 பேரும், மலேரியாக் காய்ச்சலுக்கு 698 பேரும், சுவாசப்பைத் தொற்று நோய்க்கு 1223 பேரும், தோல் வியாதிகளுக்கு 444 பேரும், நெருப்புக் காய்ச்சலுக்கு 03 பேரும், குருதிச் சோகைக்கு 161 பேரும், நாய்க் கடிக்கு 75 பேரும், பாம்புக்கடிக்கு 11 பேரும், இதய நோய்க்கு 18 பேரும், சிறுநீர்வழித் தொற்றுதலுக்கு 103 பேரும், பல் வியாதிக்கு 245 பேரும், குடற்புண்ணிற்கு 435 பேரும், சூழல் ஒவ்வாமைக்கு 250 பேரும் இம்மாதம் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதைவிட நயினாமடு, அளம்பில் ஆகிய கிளைகளில் விசேடமாக பற்சிகிச்சை நடைபெற்றுள்ளது. அத்துடன் கிராமங்களில் கிராம தரிசனமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு தனிநபர் சுகாதாரம், சுற்றாடல் சுகாதாரம் சம்பந்தமான கருத்தூட்டல்களும் இடம்பெற்றுள்ளது. தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் நடமாடும் மருத்துவர் தேவா அவர்களால் 3046 நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## குடும்பஸ்தர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

தென்னைமரத்திலிருந்து சறுக்கி நிலத்தில் வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமுற்ற நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சை பெறும் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் கடந்த 15ஆம் திகதி காலை 10.மணியளவில் விசுவமடுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.விசுவமடுவைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான த.மனோகரன் (வயது-36) என்பவரே மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்து தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவராவார்.

தொழிலின் நிமித்தம் மட்டை கட்டிய மரத்தில் ஏறியபொழுது மட்டை அறுந்ததின் விளைவாகவே மேற்படி சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவந்துள்ளது. (சோ)


## முதலாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 16 - 08 - 1944



உதிர்வு 31 - 08 - 2002

அமரர் திருமதி

**இராசமலர் அருளம்பலம்**

(நாட்டுப்பற்றாளர்)

திதி 20.08.2003

எங்கள் அன்பின் சிகரமே,
பாசத்தின் உறைவிடமே,
இறைவனிடம் சேர்ந்து
ஓராண்டு சென்றதுவோ? என்றென்றும்
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது.

20.08.2003 (நாளை) புதன் கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:-இல.52 D-10,
உருத்திரபுரம். (3648) குடும்பத்தினர்.

## 750 மில். டொலர் இழப்பு !

அமெரிக்காவில் ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக 750 மில்லியன் டொலர் நட்டம் ஏற்பட்டிருப்பதாக ஏ.எவ்.பி. செய்தி தெரிவிக்கின்றது. மேற்படி மின்தடை பயங்கரவாத செயலினால் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# அமெரிக்க கொள்கையில் மாற்றமின்றேல் அணுவாயுதத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்!

## - வடகொரியா எழுத்து மூலம் அறிவிப்பு



கடந்த வியாழனன்று பழுதடைந்த, அமெரிக்காவிலுள்ள ஒகியா மாகாணத்திலுள்ள 680 மெகாவாட் மின்னை உற்பத்தி செய்யும் நிலக்கரி மின்சார நிலையம்.

(பியாங்யாங்)

**வடகொரியா குறித்து அமெரிக்க கொள்கைகளில் மாற்றம் ஏற்படாது விட்டால் அணுவாயுதத் திட்டங்களை ஒருபோதும் கைவிடப் போவதில்லை என்று வடகொரியா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

வடகொரியா அணுவாயுத விவகாரத்திற்கு தீர்வுகாணும் வகையிலான ஆறு நாடுகள் கலந்து கொள்ளும் பேச்சுவார்த்தைகள் பெய்ஜிங் நகரில் இம்மாத 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை தெரிந்ததே. அமெரிக்கா, வடகொரியா, சீனா, தென்கொரியா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் இதில் பங்குபற்ற இருக்கின்றன.

வடகொரியா அதிகாரிகள் கருத்து தெரிவிக்கும் போது தமது நாடு சம்பந்தமான அமெரிக்க கொள்கைகளில் மாற்றம் ஏற்படாது விட்டால் பெய்ஜிங் பேச்சுவார்த்தைகளின் போது அணுவாயுதத் திட்டங்கள் கைவிடப்படமாட்டாது என்ற அறிவித்தல்கள் விடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் சம்பந்தமான வடகொரிய வெளிவிவகார அமைச்சின் அறிக்கை ஒன்றும் வாஷிங்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நீண்ட அறிக்கையில் வடகொரியா சம்பந்தமாக அமெரிக்கா அதன் கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சீனாவின் உயர் மட்ட இராணுவக் குழுவினர் நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு வடகொரியா சென்றுள்ளனர். இவர்கள் வடகொரிய அதிகாரிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர். அனேகமாக சீனாவில் நடைபெறவுள்ள பேச்சுக்களிற்கான ஏற்பாடுகள் குறித்தே இவர்கள் ஆராய்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஊழல் நிறைந்த வாஜ்பாயின் அரசை அகற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது

## —நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் சோனியா

(புதுடில்லி)

வாஜ்பாய் அரசு மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது மக்களவையில் நேற்று விவாதம் தொடங்கியது.

காங்கிரஸ்கட்சித் தலைவி சோனியா காந்தி விவாதத்தைத் தொடக்கி வைத்துப்பேசுகையில், கார்க்கில் போரில் ஆயுதங்கள் வாங்கியதில் ஊழல் நடந்ததாகக்குற்றம் சாட்டியதுடன், இதற்காக வாஜ்பாய் அரசு மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

அத்துடன் வாஜ்பாய் அரசு ஊழல் நிறைந்தது என்றும், இந்த அரசு அகற்றப்பட வேண்டும் என்றும் அதற்கான நேரம் வந்துவிட்டதாகவும் கூறினார். தொடரும் இந்த விவாதம் இன்று மாலையே முடிவடையும்.

இந்தத்தீர்மானம் பற்றி பிரதமர் வாஜ்பாய், துணைப்பிரதமர் அத்வானி, பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச பெர்னாண்டஸ் ஆகியோர் விவாதித்துப் பேசவுள்ளார்கள்.

இன்று மாலை இந்த விவாதம் முடிந்தவுடன், தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதே வேளை எதிர்க்கட்சிகளின் இந்த நம்பிக்கையிலாத் தீர்மானம் அவர்களுக்கு நன்மையளிக்கப் போவதில்லை என்றும்,324 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதனால் வெற்றி நிச்சயம் என பிரதமர் வாஜ்பாய் உறுதியுடன் கூறியுள்ளார்.

இதே வேளை நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் அ.இ. அ.தி.மு.க கலந்து கொள்ளாது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான ஜெயலலிதா நேற்று அறிவித்துள்ளார்.

# எண்ணெய்த் தாங்கி வெடிப்பு சுற்றாடலுக்கு பெரும் ஆபத்து!

ஈக்வடோரின் அமேசன் காட்டுப் பிரதேசத்தில் பெற்றோலிய பொருட்களை நிரப்பி வைக்கும் தாங்கி ஒன்று வெடித்ததினால் பெருமளவு மசகு எண்ணெய் வனப் பிராந்தியத்தில் கசிந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த தாங்கியில் 59000 பீப்பா மசகு எண்ணெய் சேகரித்து வைக்க முடியும். அடர்ந்த காட்டுப் பகுதியில் உள்ள இந்த தாங்கி கடந்த சனியன்று இரவு வெடித்ததாக ஈக்வடோரின் எண்ணெய் வள அமைசசர் தெரிவித்துள்ளார்.

இதனால் 5000 பீப்பா மசகு எண்ணெய் அருகில் உள்ள ஆற்று நீரில் கலந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## - பொடோவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள -

# ம.தி.மு.க. வினர் எண்மர் சமர்ப்பித்த பிணை மனு உயர் நீதிமன்றில் ஏற்பு

(சென்னை)

வைகோ உள்ளிட்ட 09 பேர் மீதான பொடோ வழக்கு விசாரணைக்குத் தடைவிதிக்க முடியாது என்று சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதாக, பொடோ சட்டத்தின் கீழ் தமிழக அரசால் வைகோ உள்ளிட்ட 09 ம.தி.மு.கவினர் கைதுசெய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கின் விசாரணைக்குத் தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்து விட்டது.

வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரும் ம.தி.மு.கவினர் 08 பேரின் மனு, விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மதுரை திருமங்கலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதாக, ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ உட்பட அக்கட்சியினர் 09 பேரின் மீதும் பொடோ சட்டத்தின் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இவர்களில் வைகோ தவிர, ஏனைய 08 ம.தி.மு.கவினர் தங்களை வழங்கிலிருந்து விடுவிக்கக்கோரி தாக்கல் செய்த மனுவை பொடோ நீதிமன்றம் கடந்த மாதம் 12ஆம் திகதி தள்ளுபடி செய்திருந்தது. இதையடுத்து ம.தி.மு.கவைச் சேர்ந்த கணேசமூர்த்தி புலவர் சிவந்தியப்பன், மதுரை கணேசன், நாகராஜ், மணியன், சுரேஸ் உள்ளிட்ட 08 பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர்.

நேற்று அந்த மனுக்கள் நீதிபதிகள் என்.தினகர், எம்.சொக்கலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனு மீதான விசாரணை முடியும் வரை பொடோ வழக்கை விசாரிக்க பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்திற்கு தடை விதிக்க வேண்டுமென்று ம.தி.மு.க சார்பில் வலியுறுத்தப்பட்டது.

ஆனால், அதை நிராகரித்து விட்ட நீதிபதிகள், இவ்வழக்கில் 02 வாரத்திற்குள் பதில் மனு தாக்கல் செய்யும் படி காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளனர்.



இடிஅமீனின் மறைவை அறிவிக்கும் செய்திப் பத்திரிகையை விற்பனை செய்யும் பத்திரிகை வியாபாரி.

# அரசியல் யாப்பில் மாற்றம் செய்யாமல் ஆட்சியைப் பகிர நேபாள அரசு அழைப்பு

(காத்மண்டு)


மாவோ தீவிரவாதிகளின் அரசியல் யாப்பு மாற்றத்திற்கான கோரிக்கையை நேபாள அரசாங்கப் நிராகரித்துள்ளது.

மாவோ தீவிரவாதிகள் புதிய அரசியல் அமைப்பில் பலின் செயற்பாடுகள் வரையறுக்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

இந்தக் கோரிக்கை நிராகரிக்கப் பட்டிருந்தாலும் கூட இடைக்கால நிர்வாகத்தில் பிரிவினை வாதிகளை இணைத்துக் கொள்வதற்கு நேபாள அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

அரச தரப்பு சமாதானப் பேச்சாளர்கள் மேலும் கருத்து தெரிவித்த போது, பாராளுமன்றத் தேர்தல் ஒன்றை நடத்த தாம் இணங்கியுள்ளதாகக் கூறியுள்ளனர்.

நேபாளத்தில் மன்னர் ஆட்சியை ஒழிக்க மாவோ தீவிரவாதிகள் போராடி வருகின்றமை தெரிந்ததே.



பாகிஸ்தான் கடற்கரையில் கராச்சி நகருக் கண்மையில் கிரேக்க எண்ணெய்க் கப்பல் வெடிப்பினால் கரையில் படிந்துள்ள எண்ணெய்யை சுத்திகரிக்கும் உழவு இயந்திரங்கள்.



பங்களாதேஷில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது பொலிசாரின் தடைகளை அகற்றி முன்னேற முயலும் அவாமிலீக் அமைப்பின் பெண்கள்.

# பெட்டகத்தில் சிக்குண்ட ஆறு சிறார்கள் மரணம்

(தெஹ்ரான்)

ஈரானின் வடபகுதியில் ஒளித்து விளையாடிய ஆறு சிறுவர்கள் மூச்சுத் திணறி இறந்துள்ளனர்.

பாரிய பெட்டகம் ஒன்றில் தம்மை பூட்டிக்கொண்டு ஒளிந்திருந்ததிலேயே அவர்கள் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1.3 மீற்றர் நீளமும் ஒரு மீற்றர் அகலமும் 2 மீற்றர் உயரமும் கொண்ட அந்த பெட்டகத்தினுள் நான்கு சிறுவர்களும் இரண்டு சிறுமிகளும் ஒலித்துக் கொண்ட பின்னர் கதவைத் திறக்க முடியாததால் மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளனர்.

# அரசிற்கெதிரான செயல் திட்டங்களை முன்னெடுக்க பொ. ஐ. மு. பின்னடிப்பு!

## - வருடமொன்றாகியும் முன்னேற்றமில்லை

(கொழும்பு)

**ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதான எதிர்க்கட்சியான பொது சன ஐக்கிய முன்னணி அக்கறையற்று செயற்பட்டு வருகிறது. இதுவரை அது உருப்படியான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என குற்றம்சாட்டப்பட்டுள்ளது.**

தனியார் மயமாக்கல், அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம், தொழிற்சங்க வாதிகளின் சட்டங்களை குறைத்தல், எதிர்க்கட்சியினரை சித்திரவதைக்குள்ளாக்கல், சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்காமை போன்ற அரசின் நடவடிக்கைகளுக்கெதிராக செயற்படுவதற்காக பொ. ஐ. முன்னணியால் குழு அமைக்கப்பட்டு ஒரு வருடமாகியும் அது தொடர்பான அதன் அறிக்கைகள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்குழுவில் பொ.ஐ.முன்னணியுடன் தொடர்புடைய ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர். எனினும் இது தொடர்பாக எதுவித கலந்துரையாடல்களும் நடைபெறவில்லை. இக்குழுவின் அறிக்கைகள் எதுவும் வெளியிடப்படாததால் ஆளும் கட்சிக்கெதிராக மேலும் நடவடிக்கைகள் எடுக்க முடியாதுள்ளதாகவும் அதன் காரணமாகவே அரசு தான் நினைத்தவாறு செயற்படுவதாகவும் லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர் பட்டிவீரக்கோன் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜே.வி.பி. பொ.ஐ.முன்னணி கூட்டணிக்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாலும் பொ.ஐ. முன்னணி திட்டமிட்டவாறு அரசுக்கெதிராக மேற்கொள்ள உத்தேசித்த நடவடிக்கைகள் தானாகவே செயலிழந்துள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார். இந்த எதிர்ப்புக் குழுவின் நடவடிக்கைகள் செயலற்றுப் போயுள்ளதால் அது ஆளும் கட்சிக்கு ஆதரவாக செயற்படுவது போலுள்ளது என சிறில.சு. கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இக்குழுவின் செயற்றிறன் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலையீடு காரணமாக இருப்பினும் கட்சிக்குள் ஏற்பட்ட தடை காரணமாக இக்குழுவின் செயற்பாடு பின் தள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## இராணுவ பாதுகாப்பு

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்திற்கு கடுமையான இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வலுவலக வளாகத்தில் தனியான இராணுவ காவலரண் அமைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## முள்ளியவளை வைத்தியசாலையில் 6666 பேருக்கு சிகிச்சை

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஆடி மாதம் 6666 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாக மேற்படி வைத்திய சாலையின் கடந்த மாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் விபரமாகத் தெரிவிக்கையில், வெளி நோயாளர் பிரிவில் 4513 நோயாளர்களும் சாதாரண காய்ச்சலினால் 1060 நோயாளர்களும் சிரங்கினால் 585 பேரும் குருதிச் சோகையினால் 324 பேரும் மலேரியாக் காய்ச்சலினால் 94 பேரும் வயிற்றோட்டத்தினால் 26 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் மகப்பேற்றுமனையில் கடந்த மாத மகப்பேற்றுக்காக 38 கர்ப்பிணித் தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு அதில் 26 சிசுப் பிறப்புக்கள் நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மகப்பேற்று விடுதி பூரணமாக வேலைகள் முடிக்கப்பட்டு இன்னமும் திறக்கப்படாதுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஆ)

## - படையினரின் கெடுபிடிகள் -

## தெல்லிப்பளை புற்றுநோய் மருத்துவமனைக்கு செல்வோர் தொகை குறைகின்றது

(யாழ்ப்பாணம்)

படையினரின் கெடுபிடி நடவடிக்கைகளால் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது என்று இவ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள ஒரேயொரு புற்றுநோய் வைத்தியசாலையான இவ்வைத்தியசாலை சிறிலங்கா இராணுவத்தினரின் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருப்பதனால் இவ்வைத்திய சாலைக்குச் செல்லும் நோயாளர்கள் கூட அடையாள அட்டை பரிசோதனைகள் மற்றும் உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இதனால் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதுடன் மிகவும் கஷ்டங்களையும் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அத்துடன் இவ்வைத்தியசாலையின் நுழைவாயிலிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சோதனைச்சாவடியிலேயே மோட்டார் வண்டிகளும் மறிக்கப்படுவதால் நோயாளர்கள் நடந்தே மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இது போன்ற படையினரின் துன்புறுத் தல்களால் நோயாளர்கள் இந்த மருத்துவமனைக்கு வராது தனியார் மருத்துவமனைகளில் வைத்திய சேவையைப் பெறுகின்றனர்.

அத்துடன் இவ்வைத்தியசாலைக்குச் செல்லும் வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் தாதிமார்கள் கூட மிகவும் சோதனைக் கெடுபிடிகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (33)

## தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கான கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

தேசியக் கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கான விளக்கக் கூட்டம் ஒன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பல்நோக்கு மண்டபத்தில் நடைபெற உள்ள இவ்விளக்கக் கூட்டத்தில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நுட்ப முறைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளது. இக் கூட்டத்தில் கலந்து கொள்வதன் மூலம் தமிழ் மொழி மூலமான ஆசிரியர் பயிலுநர்கள் பலர் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதால் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இக் கூட்டத்திற்குத் தவறாது சமுகமளிக்குமாறு வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி க.பேர்னாட் கேட்டுள்ளார். (10)

## சின்னமுத்து நோயை இல்லாதொழிக்க நாடளாவிய ரீதியில் நடவடிக்கை

வடக்கு,கிழக்கு உட்பட நாடு முழுவதும் சின்னமுத்து நோயை முற்றாக இல்லாது ஒழிக்கும் திட்டத்திற்கு ஐக்கிய அமெரிக்காவின் நோய் தடுப்புக்கான மத்திய நிலையம் 100 மில்லியன் ரூபா பெறுமதியான தடுப்பு மருந்துகளை வழங்கியுள்ளது.

இதனை சுகாதார, போஷாக்கு, நலன்புரி அமைச்சின் நோய் பரவுகைத் தடுப்பு நிபுணர் மருத்துவர் எம்.ஆர். நிஹால் அபேசிங்க நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த தடுப்பு மருந்துகளில், சின்னமுத்து நோய் தடுப்பு மருந்துகளும், சிறிஞ்சுகளும் அடங்குகின்றன.

இந்த நோய் ஒழிப்பு நடவடிக்கையில் மருந்து வழங்கும் திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர்,அக்டோபர் மாதங்களில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பத்து வயது முதல் பதின்நான்கு வயது வரையான சகல சிறுவர்களுக்கும் இந்த தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது.

## மல்லாவிப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்புப் பயிற்சி

(ஒட்டுசுட்டான்)

முல்லை.மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து நடாத்தும் இடம்பெயர் சேவை துணுக்காய் கால்நடை வைத்தியர் பிரிவில் நடைபெறுகின்றது.

இதில் பயிற்சி வகுப்புக்கள் நேற்றுக் காலை 9.00 மணியளவில் யோகபுரம் மகாவித்தியாலயத்தில் துணுக்காய் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் அமலனின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்றது. நிகழ்வில் தலைமையுரையினை முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கால்நடை திட்ட விரிவாக்க அலுவலர் கு.பாஸ்கரன் நிகழ்த்தினார்.

வெளிநாட்டில் கால்நடைவளர்ப்பு முறை ஆங்கில வீடியோப் படம் மூலம் காண்பிக்கப்பட்டது. இதை இடம்பெயர் சேவை வைத்தியர் வசீகரன் மொழியாக்கம் செய்து எமது பிரதேசத்திற்கு ஏற்றவகையில் வளர்ப்பு முறையை விரிவாக்கம் செய்தார்.

இப்பயிற்சி வகுப்பில் மேலதிகமாக விசர்நாய் கடித்தால் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் ஏற்படும் பாதிப்பினை வீடியோப்படம் மூலம் விவரணப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (05)

## கிளி.அம்பாள்குளம் கிராமத்தில் பாடசாலை அமைக்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் புதிதாக அரசினர் பாடசாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி விடயம் குறித்து அண்மையில் கிளி. அரச செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது குறித்துக் கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில், அம்பாள்குளம் கிராமத்தில் பாடசாலை ஆரம்பிப்பது தொடர்பாகக் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெறும் பொருட்டு அமைச்சிற்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனுமதி கிடைக்கப்பெற்றதும் 2004 ஆம் ஆண்டு தைத்திங்கள் முதல் அம்பாள்குளத்தில் பாடசாலை ஆரம்பிக்கநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (சோ)

## கொழும்பு-கண்டி இடையே கடுகதி பாதை அமைக்க முடிவு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கண்டிக்குப் புதிய கடுகதி வீதியொன்றை அமைத்துக் கொடுக்க மலேசிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

ஒரு மணி நேரத்தில் கொழும்பிலிருந்து கண்டிக்கு சென்றடையக் கூடிய வகையில் இந்தப் பாதை அமைக்கப்படும். தற்போது கண்டி வீதியால் செல்வதற்குக் குறைந்தது மூன்று மணிநேரம் பிடிக்கிறது.

இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் மலேசியா அரசுடன் ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டுள்ளது. 27 பில்லியன் ரூபாய் செலவில் இந்த அதிவேக பாதையை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. மேலும், இவ் வீதியில் பயணிப்பதற்கு வீதிப் பாவனை வரி ஒன்றும் அறவிடப்படவுள்ளது.

## இலங்கையின் நிலைமைகள் சுமுகமாக இருப்பதாக இந்தியா கருதக் கூடாது

### - சனாதிபதியின் ஆலோசகர் தெரிவிப்பு



(லண்டன்)

இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் சமாதானத்தால் அங்கு போர்ச்சூழல் நிகழவில்லை என்பதால் நிலைமைகள் சுமுகமாக இருப்பதாக இந்தியா கருதக்கூடாது என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் வெளியுறவுத்துறை ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ஒரு வாரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் இந்திய உயர் அதிகாரிகளை சந்தித்து பேச்சுக்களை நடத்தி வருகின்றார். இதன் ஓர் அங்கமாக கடந்த சனிக்கிழமை வெளிநாட்டு ஊடகத்துறை செய்தியாளர்களை சந்தித்து உரையாடியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

போர்நிறுத்த சூழ்நிலையைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் அமைப்பு இராணுவ ரீதியிலும் ஆயுத ரீதியாக தங்களை மிகவும் பலப்படுத்திக்கொண்டு வருவதாகவும் இதை இந்தியாவுக்கு உணரவைப்பதற்காகவே தான் இந்தியா வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக திருகோணமலை துறைமுகத்தைச் சுற்றி விடுதலைப் புலிகள் கேந்திரமான முகாம்களை அமைத்துள்ளனர். கடற்புலிகளின் தற்கொலை படகுகள் உள்ளிட்ட இராணுவ படகுகளின் நடமாட்டம் திருகோணமலை கடற்பகுதியில் கடந்த ஒரு வருடத்தில் பல மடங்கு அதிகரித்துள்ளது என்று கூறினார்.

மேலும் தனது கையோடு கொண்டுவந்திருந்த திருகோணமலைப் பகுதியின் வரைபடத்தைக் கொண்டு சுமார் மூன்று மணிநேரம் திருகோணமலை சூழ்நிலையை செய்தியாளர்களுக்கு விளக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை விவகாரத்தில் கடந்த காலங்களில் தலையிட்டபோது நடந்த கசப்பான அனுபவங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும் போது இந்தியா உடனடியாக இலங்கைக்கு வந்து புலிகளுக்கு எதிரான பகிரங்க எச்சரிக்கையை விட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.


இலங்கை இனப்பிரச்சினைக்கு சட்டரீதியிலான தீர்வுகள் குறித்து ஒரு செயல் திட்டத்தை இந்தியா வகுக்க வேண்டிய நேரம் வந்திருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சட்டரீதியில் எந்த மாதிரியான தீர்வைக் காணமுடியும் என்று இந்தியா தீவிரமாக சிந்திக்கவேண்டிய நேரம் வந்திருப்பதாகவே நான் கருதுகிறேன். இல்லாவிட்டால் இலங்கையில் புதிய நாடு உருவாவதை இந்தியா பார்க்க நேரும் எனவும் தெரிவித்துள்ளார்.

# கணினியின் மறுபக்கம்

## அறிவியல் உலகில்

கணினிகள் இன்று மனிதனுக்கு ஓர் இன்றியமையாத அனைத்துத் துறைகளிலும் உறுதுணையாக இருக்கும் சாதனமாக இருப்பினும் இவற்றில் தீமையான மறுபக்கமும் இருக்கிறது. ஏனைய பல விஞ்ஞான சாதனங்கள் போலவே கணினிகள்-கணினிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள்




சுற்றுப்புறச் சூழலுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன. அதேவேளை கணினி மோகங்கொண்டு மனிதன் அலைவதும் வேறுசில பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இதற்குத் தீர்வுகாணும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலகம் முழுவதும் ஏறத்தாள 38 கோடிகணினிகள் உள்ளன. இவற்றில் 75 சதவீதமான கணினிகள் பாவனையில் உள்ள அதேவேளை மிகுதி காற்பங்கு கணினிகள் பாவனையற்று வீசப்பட்டுள்ளன என மதிப்பிடப்படுகிறது. இவை அண்மைய தயாரிப்புகளாக இருப்பினும் பல்வேறு காரணங்களுக்காக இவ்வாறு பயனற்றுக்கிடக்கின்றன. கணினிகளின் தொகை விரைவாக அதிகரித்து வருகிறது. இது அடுத்த ஆண்டில் மூன்று மடங்குகளாக அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாக எதிர்வுகூறப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் அமெரிக்காவில் மட்டும் ஒருகோடி கணினிகள் இவ்வாறு ஒதுக்கித்தள்ளப் படுகின்றன.

ஒவ்வொரு கணினியைத் தயாரிக்கவும் 700க்கு மேற்பட்ட வகையான மூலப்பொருட்கள் தேவைப்படுகின்றன. பிளாஸ்ரிக் பல உலோகங்கள், கண்ணாடி இரசாயனவகைகள், வாயுக்கள், மின்கடத்தாத மூலப்பொருட்கள் என்பவற்றுடன் ஓசோன் மண்டலத்தைப் பாதிக்கும் குளோரோ புளோரோ காபன் என இப்பொருட்கள் விரிந்துசெல்கின்றன. இவை சூழலை மாசுபடுத்துபவை என்பது நிருபணமாகியிருக்கின்றது. எனவே இவற்றின் தயாரிப்பால் பாதகமான விளைவு ஏற்படுகிறது. இதேவேளை கணினியில் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் சிலிக்கன் துண்டு தயாரிப்புக்கு பல மூலப்பொருட்கள் பாவிக்கப்படுகின்றன. ஒரு சிறிய எட்டு அங்குல நீள சிலிக்கன் துண்டைத்தயாரிக்க 4267 கனஅடி வாயுக்கள், 3787 லீற்றர் நீர், 29கன அடி ஆபத்தை விளைவிக்கக்கூடிய வாயுக்கள், 27 இறாத்தல் இரசாயனப் பொருட்கள், 3000 லீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீர் என்பன பயன்படுத்தப்படுகின்றன. அதேவேளை கழிவுப் பொருளாக ஒன்பது இறாத்தல் கேடுவிளைவிக்கும் நச்சுவாயுக்கள் வெளிவருகின்றன. ஒரு கணினித் தயாரிப்புத் தொழிற்சாலை வாரமொன்றுக்கு 5000 சிலிக்கன் துண்டுகளைத் தயாரிக்கும் நிலையில் உலகிலுள்ள இவ்வாறான தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் மூலப்பொருட்களின் அளவையும் வெளிவிடும் நச்சுவாயுவின் அளவையும் கணிப்பிடலாம். உலகில் பல கோடிக்கணக்கானோர் குடிநீர் இன்றித் தவிக்கையில் மெக்சிக்கோவிலுள்ள பிரபலமான இன்டெல் சிலிக்கன் தொழிற்சாலை மட்டும் ஒருகோடி கன அடிநீரை ஒரு நாளுக்கு பயன்படுத்துகிறது.

இதேவேளை கணினிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இயங்க பெருமளவான மின்சக்தி தேவைப்படுகிறது. அத்துடன் ஒரு கணினி இயங்க ஒரு மணித்தியாலத்திற்கு சுமார் 300 வாற் மின்சாரத்தை உறிஞ்சுகிறது. எனவே உலகெங்கிலுமுள்ள கணினிகள் அதனுடன் இணைந்த கருவிகள் இயங்க எவ்வளவு தொகையான மின்சாரம் தேவைப்படும் என்பதை உணர்ந்துகொள்ள முடியும். உலகிலுள்ள கணினிகளுக்கு ஓராண்டுக்குத் தேவைப்படும் மின்சக்தியைப் பெற 2.3 கோடி தொன் நிலக்கரி தேவைப்படுகிறது. இம்மின்சாரம் மனிதருக்கு



பல பயன்களை ஏற்படுத்துகின்றபோதும் அதற்கென பெருமளவான சக்தி மூலவளம் இயற்கையிலிருந்து பெறப்படுவதால் இது குறித்துச் சூழலியலாளர்கள் கவலை கொள்கின்றனர்.

கணினி கண்டுபிடிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் இதன் மூலம் "கடதாசியற்ற அலுவலகம்" (**Paperlees office**) ஒன்றை உலகம் எதிர்பார்த்தது. அதாவது கடதாசிகளில் அச்சிட்டுப் பெறும் முறை மாற்றப்பட்டு மின்காந்தத் தட்டுக்களில் தகவல் பரிமாறும் முறை எதிர்பார்க்கப்பட்டது. இதன் மூலம் கடதாசிக்கென அழிக்கப்படும் பெருமளவான தாவரங்கள் காப்பாற்றப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கணனிகளின் மூலம் பெறப்படும் வெளியீடுகள் அச்சிடும் கருவிகள் (**printer**) மூலம் பெறப்படும் நடைமுறையில் மாற்றம் பெரிதளவில் இடம்பெறாததால் எதிர்பார்த்த விளைவு கிடைக்கவில்லை. இன்றும் உலகிலுள்ள அச்சிடும் கருவிகளுக்கு 11500 கோடி ஏ-4 அளவு காகிதங்கள் தேவைப்படுகிறதெனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

கணினிகள் மூலம் அச்சிடப்பயன்படுத்தும் அச்சிடும் கருவிகளிலுள்ள மை பெற்றோலியப் பொருட்கள் மூலம் தயாரிக்கப்படுகின்றன. இவை பயன்படுத்தப்பட்ட பின் வீசப்படுவதால் மையை அடைத்து வைக்கும் கொள்கலன்களில் மீதமிருக்கும் மை சூழலுக்குக் கெடுதலை உண்டாக்குகின்றது.

கணினிகள் பிளாஸ்ரிக் பாகங்கள் தீப்பிடிக்காதிருக்கப் பூசப்படும் ஒரு வகை இரசாயனம் வெப்பம் காரணமாக ஆவியா கும் போது வெளிவரும் வாயு சுற்றுச் சூழலுக்குத் தீங்கானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று கணினிகள் மட்டுமல்ல, நாம் அன்றாடம் வீட்டில் பயன்படுத்தும் மின்சாதனங்கள் தயாரிப்பின் போதும் பயன்பாட்டின்போதும் இவ்வாறான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியே உள்ளது. உதாரணமாகக் குளிர்சாதனப் பெட்டிகளில் குளிர்விக்கப் பயன்படுத்தப்படும் குளோரோ புளோரோ காபன் புவிக்குக் கவசம் போல அமைந்திருக்கும் ஓசோன் மண்டலத்தில் துவாரத்தை ஏற்படுத்தியிருப்பதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இந்த எச்சரிக்கையை அடுத்து மாற்றீடாக குளோரோ புளோரோ காபன் பயன்படுத்தாத குளிர் சாதனப் பெட்டிகள் குளிரூட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

இவ்வாறு கணினித்துறையிலும் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கான பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாகக் கணினிகளை வீசியெறியாது அவற்றை மேம்படுத்தும் உத்திகள் இலத்திரனியல் தகவல் பரிமாற்ற மூலம் காகிதப் பாவனையைக் கட்டுப்படுத்தல் தாவரமை, மீண்டும் மீண்டும் அழித்துப் பயன்படுத்தக் கூடிய குறுவட்டுகள், மீண்டும் மீள நிரப்பிப் பயன்படுத்தும் அச்சுமை கொள்கலன்கள் நாடாக்கள் என மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்ற போதிலும் சுற்றுப் புறச் சூழலியலாளர்கள் திருப்தி கொள்வதாக இல்லை.

கணினி தொடர்பான ஆராய்ச்சியில் செலவிடப்படும் மனித மூளைவளம் போக்குவரத்துத் துறையில் செலவிடப்பட்டால் சுற்றுச் சூழலுக்குத் தீங்கற்ற மிகவும் மலிவான போக்குவரத்துச் சாதனமொன்றைக் கண்டுபிடித்திருக்கலாம் என சில அறிவியலாளர் கூற கணினி அதைவிடப் பலவற்றைச் சாதித்து வருகிறது. சாதிக்கக் காத்திருக்கின்றது என கணினித்துறை ஆராய்ச்சியாளர்கள் அடித்துக் கூறுகின்றனர். இதேவேளை இயற்கையையும் சுற்றுச் சூழலையும் மாசுபடுத்தாத பசுமைக் கணினி (**Green PC**) களைச் சூழலியல் ஆர்வலர்கள் அவாவுகின்றனர்.

**சி.சிவபாலன்**

# பிரபல பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்க நிதி அறவிடுவது குறித்து விசாரணை

பிரபல பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக அதிபர்களினால் அறவிடப்படும் நிதி குறித்து விசாரணைகளை மேற்கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதன்படி ஒவ்வொரு வருடமும் முதல் ஆறு மாதங்களில் பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெற்ற நிதித் தொகையை தனித்தனியாக ஊடகங்கள் ஊடாக வெளியிடவுள்ளதாகவும் அவ் வேளையில் முறைகேடுகள் நடந்திருப்பின் அது குறித்து அமைச்சுக்கு முறையிட்டால் அந்த அதிபருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பின்லாந்து முன்னாள் சனாதிபதி தலைமையிலான குழு வருகை

பின்லாந்தின் முன்னாள் சனாதிபதி அண்டிகாரிமாட்டி தலைமையிலான குழுவினர் அடுத்த சில தினங்களுக்குள் சிறிலங்கா வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழு இலங்கையில் தங்கியிருக்கும் நாட்களில் பிரதமர் மற்றும் அமைச்சர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சியை முன்கொண்டுச் செல்வதில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் மற்றும் அதற்கான நிவர்த்தி போன்ற விடயங்கள் குறித்து இந்தக் குழு பேச்சுக்களை நடத்தவுள்ளது.

அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான அரசியல் அமைப்பு சட்ட விவகாரமும் இந்தப் பேச்சுக்களில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்டிகாரிமாட்டி உலகின் பல நாடுகளில் சமாதான முயற்சிக்குச் சட்ட நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீதித்துறையை சீரமைக்க பாராளுமன்றக் குழு அமைப்பு

(கொழும்பு)

நீதித்துறையை மீள்கட்டமைப்பதற்கான விசேட பாராளுமன்றக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவிற்கு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தலைமை தாங்குகின்றார்.

நாட்டின் முழுமையான நீதித்துறையின், மீள்கட்டமைப்பிற்கான பரிந்துரையைக் குழு முன்வைக்கவுள்ளது.

# மிதிவெடி அகற்றல்

'ஹலோட்ரஸ்ட்' நிறுவன அனுசரணையுடன் வரணியில் மிதிவெடி அகற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட மண்அரண் பகுதிகளிலேயே கூடுதலான மிதிவெடிகள் இருப்பதாக நம்பப்படுகின்றது. மிதிவெடி அகற்றும் வேலைகளில் சுமார் 20 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# இருவருடங்களில் 826 பேர் பலி

தனியார் பேருந்துகளால் ஏற்படும் வீதி விபத்துக்கள் கடந்த 02 வருடங்களில் 23 ஆயிரத்து 343ஆக இருப்பதுடன் 826பேர் இவ்விபத்துக்களில் இறந்தும் போயுள்ளனர் என பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை மீறும் சாரதிகளுக்கு விதிக்கப்படும் தொகை, முன்பைவிடக் கூடுதலாக அதிகரிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீருவில் தூபி புனரமைப்பு துரிதகதியில் நடைபெறுகிறது

தீருவில் தூபியைப் புனரமைக்கும் பணியில் வல்வெட்டித்துறை மக்கள் ஒன்றியம் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

தமிழீழக் கடற்பரப்பில் வைத்து அன்னியப் படைகளின் சதிவேலைகளால் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட குமரப்பா,புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவாக வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இப்பிரமாண்டமான தூபி, 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட தமிழர்கள் மீதான மிலேச்சத்தன மான படையெடுப்பால் மிகவும் சேதப்படுத்தப்பட்டிருந்தது.

இருந்தபோதும் இப்பொழுது மக்களின் தீவிரமான முயற்சியால் இத்தூபிப்பகுதி மிகவும் சிறப்புற புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்தப் புனரமைப்புப் பணிக்கு வல்வெட்டித் துறை மக்கள் ஒன்றியமும் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கிவருகின்றது. (33)

- ஊர்காவற்படை சிப்பாயை -

# காரணமின்றி தடுத்துவைத்த பொலிஸ் அதிகாரி இடைநிறுத்தம்

ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவரை சட்டவிரோதமாகக் கைது செய்து, காரணமின்றி தடுத்து வைத்ததுடன் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பொய்வழக்குத் தாக்கல் செய்தமைக்காக வவுனியா மடுக்கந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக வன்னிப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் எம்.பி.பெத்தேவெல வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அறிவித்துள்ளார்.

மேலும் இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் ஏனைய பொலிசாருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பாக சுதந்திரமாக விசாரணைகள் மேற்கொண்டு அறிக்கை தயாரிக்குமாறும் பிரதிபொலிஸ்மா அதிபர் கடிதத்தில் கோரியுள்ளார்.

மடுக்கந்தை பொலிஸ் பொறுப்பதிகாரியின் தனிப்பட்ட கோபம் காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள ஊர்காவற்படை உறுப்பினர் தனது அடிப்படை உரிமைகள் மீறும் வகையில் பொறுப்பதிகாரி நடந்து கொண்டதாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ததையடுத்தே பொறுப்பதிகாரி பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

"ஓம் நமோ நாராயணாய"

## ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் - வட்டக்கச்சி,கிளிநொச்சி.

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் -20.08.2003






விழாக்கால பிரதமகுரு
சுன்னாகம் கதிரமலைச் சிவன்
தேவஸ்தானம் பிரதான குரு பிரம்மஸ்ரீ
சர்வேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீகாந்தக்குருக்கள்
அவர்களின் ஆசியுரை.

கிளிநொச்சி மாவட்டத்திலே வட்டக்கச்சி என்னும் புண்ணிய பூமியிலே ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீரங்கநாதப்பெருமாள் கோவில் கொண்டு பக்தர்களுக்கு அருள்பாலித்த வண்ணம் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் கோவிந்த நாமமும் பகவத் கீதையும் ஒரே நோக்கில் ஒலித்த வண்ணம் இருப்பதனாலே ஒரு புனித பூமியாக காட்சியளிக்கின்றது.

பகவானிடம் பக்தர்களின் பக்தி வெள்ளத்தின் பெருக்கை காணக்கூடியதாகவுள்ளது. 20-08-2003 புதன்கிழமை திருத்தேரிலே பகவானின் காட்சியைப் பெருந்திரளான மக்கள் கண்டுகளிக்கவுள்ளார்கள். அன்றைய தினத்திலே எம்பெருமானுடைய கிருபா கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்றும் மக்கள் எல்லோரும் நிரந்தர சமாதானத்துடனும் அமைதியாகவும் வாழவேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

### கீதையில் கண்ணன்...

பயனைக்கருதி, கருமம் செய்பவனாக இராதே. என்னிடத்திலேயே மனதை ஒருமுகப்படுத்தி எப்போதும் இடையறாமல் என்னையே தியானித்து, மிகுந்த சிரத்தையுடன் என்னை உபாஸிக்கும் பக்தனைத்தான் நான் தலைசிறந்த உபாஸகனாகக் கருதுகிறேன்.

அர்ஜுனா!
நீ என்னிடம் மனத்தைச் செலுத்திவிடு.
புத்தியை ஈடுபடுத்து.
என்னிடம் மனமும் புத்தியும் வைத்தபிறகு
நீ என்னுள்ளேயே வாழ்வாய்.
இதில் சந்தேகமே இல்லை.
இம்மாதிரி உன்மனத்தையும் புத்தியையும்
என்னுள்
நிலைப்படுத்தி வைக்க இயலாமல் போனால்,
தீவிரமான
பயிற்சி மூலம் என்னை அடைய விரும்பு.
இதுவும் உன்னால் இயலாது போனால்
எனக்காகக் கடமைகளை ஆற்றுவதையே
குறிக்கோளாகக்கொள்.
எனக்காக கடமைகளைச் செய்வதன்
மூலமாகவும்
நீ என்னை அடைய முடியும்.
உன்னால் இதுவும் இயலாது போனால்,
மனம், புத்தி இரண்டையும் உன் வசத்தில்
வைத்துக்கொண்டு எல்லாச் செயல்களின்
பயன்களையும் எனக்கே அர்ப்பணித்துவிடு.




வட்டக்கச்சி நகராளும் மாயவன் அருள் எல்லோருக்கும்
கிடைத்திட பிரார்த்திப்பவர்கள்:-

**கண்ணபிரான்**
பல்பொருள் வாணிபம்
அங்காடி உட்புறம், வட்டக்கச்சி. (சி-8363)

**ஸ்ரீரங்கநாதப்பெருமாள்கோவில்**
ஆலய பரிபாலனசபை
(சி-8364) மாயவனூர், வட்டக்கச்சி.

**வைகுந்தப்பெருமாள்**
பல்பொருள் வாணிபம்
அங்காடி உட்புறம், வட்டக்கச்சி. (சி-8365)

**அருள்சக்தி நகையகம்**
(புதியநிதர்சனா)
(சி-8368) அங்காடி உட்புறம், வட்டக்கச்சி.

**இசையரசி**
பல்பொருள் வாணிபம்
(சி-8367) அங்காடி உட்புறம், வட்டக்கச்சி.

**மாவடி அம்மன்**
பல்பொருள் வாணிபம்
அங்காடி உட்புறம், வட்டக்கச்சி. (சி-8366)

அழகிற்கு அழகு செய்யும்
அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு
**ஜெகம் நகையகம்**
முதன்மைச்சாலை,
கரடிப்போக்கு,கிளிநொச்சி. (சி-8369)

மின்சாரப் பொருட்கள், எஸ்லோன் குழாய்
வகைகள், நீர் இறைக்கும் மின்சார
இயந்திரங்கள் என்பனவற்றிற்கு
கிளிநொச்சி நகரில்
**செந்தூரன் களஞ்சியம்**
எம்.எம்.பி.கட்டடம்,
முதன்மைச்சாலை,கிளிநொச்சி. (சி-8370)

புல்லாங்குழல் இசைக்கும் பரந்தாமனின் பொங்கும் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

**ஆ.மு.சு.மணி அடைவு பிடிப்பகம்**
முதன்மைச்சாலை,கிளிநொச்சி.

**கு.வி.பல்பொறிஉதிரிகள் வாணிபம்**
முதன்மைச்சாலை,கிளிநொச்சி.

கிளிநொச்சி நகரில் அசல் 22கரட் தங்க நகைகளை
பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்
**சுமங்கலி நகைப்பூங்கா**
முதன்மைச்சாலை (சி-8371) கிளிநொச்சி.


சிறப்பிதழாக்கம்
காரையூரான்



## சிந்தனைக்கு

நாம் ஒன்றுபட்ட மக்களாக -- ஒரே தேசிய சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 19-08-2003

## சமாதானத்தில் நம்பிக்கையிருப்பின்...

சிறிலங்காப் படைத்தரப்பில் உள்ள 17,000 வெற்றிடங்களை நிரப்பவும், படைத்தரப்பின் சம்பளத்தை 55 சதவீதத்தினால் அதிகரிக்கவும் சிறிலங்கா அரசாங்கம் முக்கிய முடிவொன்றை எடுத்துள்ளது. சமாதான முயற்சிகளில் தீவிரமாக உள்ளதாகக் கூறும் அரசாங்கத்தின் இம்முடிவானது, ஒரு ஆச்சரியமான முடிவாக இருப்பினும் படைத்தரப்பிற்கு அதிர்ஷ்டமான முடிவு என்றே கூறலாம்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மேற்கொள்ளும் பெரும் எடுப்பிலான முதலாவது சம்பள அதிகரிப்பு இதுவாகும். அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்விற்கு பொருளாதார நிலை சாத்தியப்பாடானதாக இல்லை எனக் கூறி வரும் அரசாங்கம் இப்பெரும் சம்பள உயர்வை ஆயுதப் படைத் தரப்பிற்கு அளித்துள்ளமை ஏனைய அரச ஊழியர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவே உள்ளது.

சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பு ஏற்கனவே அதிகளவு சம்பள வீதத்தைக் கொண்டதொன்றாகவே இருந்தது. ஒரு பட்டதாரி பெறும் சம்பளத்தினைவிட ஒரு சாதாரண சிப்பாய் பெறும் சம்பளமும் -இதரபடிகளும், வசதிகளும் அதிகமானவையாகவே இருந்தன. இந்த நிலையில் தற்பொழுது அதுவும் மிக அதிக வீதத்திலான சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளமையானது இராணுவ சேவையை ஒரு கவர்ச்சிகரமான தொழில் வாய்ப்பு மையமாக உருவாக்க அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கையாகவே கொள்ளத்தக்கதாகும்.

இவ்வாறானதொரு நடவடிக்கைகளுக்குச் சிறிலங்கா அரசாங்கத் தரப்புப் பல காரணிகளை முன்வைக்கக் கூடும். அதாவது. சிறிலங்கா ஆயுதப்படைக்கு பல தடவை ஆட்சேர்ப்பிற்கென மேற்கொண்ட முயற்சியில் அது தோல்வி கண்டமை முக்கியமானதொரு காரணியாக இருக்கலாம். இதனைத் தவிர இராணுவத்தில் இருந்து தப்பி ஓடுவோரைக் குறைப்பதற்கான நடவடிக்கையாகவும் கூட இருக்கலாம்.

சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பி ஓடியோர் எண்ணிக்கை இதுவரையில் 50,000 ஆக உயர்ந்துள்ளதாகச் சில தகவல்கள் கூறுகின்றன. இதில் 10,000 பேர் யுத்த நிறுத்த உடன் பாடு செய்து கொள்ளப்பட்ட பின்னர் தப்பி ஓடியவர்கள் ஆகும். அதாவது, யுத்தம் நடந்தாலும் சரி, நடக்காது விட்டாலும் சரி இராணுவத்தில் சேவையாற்றச் சிங்கள இளைஞர்கள் தயாராக இல்லை என்பதையே இது வெளிப்படுத்துவதாய் உள்ளது.

இந்த நிலையிலேயே அரசாங்கம் கவர்ச்சிகரமான சம்பளத் திட்டங்களை அறிவித்துள்ளது. இதன்மூலம் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடுவோரை கட்டுப்படுத்தலாம் எனவும், புதியதாக இராணுவத்தில் இளைஞர்கள் சேருவதை ஊக்குவிக்கலாம் என அரசாங்கம் கருதுவதாகவும் தெரிகின்றது. ஆனால், அரசாங்கத்தின் இம்முயற்சியானது எத்தனை தூரம் வெற்றிபெறும் என்பதைப் பொறுத்திருந்தே பார்த்தல் வேண்டும்.

ஏனெனில், இராணுவத்தில் சிங்கள இளைஞர்கள் சேருவதற்கு ஆரம்பம் முதலே பின்னடித்தவர்கள் அல்ல. ஒரு காலத்தில்- குறிப்பாக தொண்ணூறுகளின் முற்பகுதியில் இராணுவத்தில் இணைய காலிமுகத்திடலில் சிங்கள இளைஞர்கள் காத்துக் கிடந்தனர். அரசாங்கமும் அதனை தனது பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டதோடு, யுத்தத்தையும் முனைப்புப் படுத்தியது.

ஆனால், யுத்தம் எவ்வளவு கடுமையானது என்பதை களமுனைக்கு வந்ததன் பின்னரே சிங்கள இளைஞர்களினால் புரிந்து கொள்ள முடிந்தது. அதேவேளை சிங்களப் பெற்றோர்களும் யுத்தத்தின் விளைவுகளைத் தமது பிள்ளைகளினதும், உறவினர்களினதும் இறப்பின் மூலமே உணரத்தக்கதாக இருந்தது. இந்நிலையிலேயே ஆயுதப்படையை விட்டுத் தப்பி ஓடுதல் என்பது ஆரம்பமாகியது.

தொண்ணூறுகளின் மத்தியிலும், அதன் பிற்பகுதியிலும் உச்ச நிலை அடைந்த இத்தப்பி ஓடுதல், யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகிய பின்னரும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இதற்கு மீண்டும் யுத்தம் ஏற்படலாம், என்ற ஐயப்பாடும் – இராணுவ சேவை என்பதே அபாயகரமானது என்ற உணர்வும் அவர்கள் மனங்களில் ஏற்பட்டுவிட்டமையும் காரணமாக இருக்கலாம்.

ஆனால், அரசாங்கம் இவற்றை பணத்தினால் ஈடுசெய்து விடலாம் என முற்பட்டு நிற்பதன் விளைவே இவ் அதிகரித்த சம்பள உயர்வாகும். ஆனால், இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதில் அரசாங்கம் காட்டும் இத்தீவிரத்தை, சமாதான முயற்சிகளில் காட்டுமேயானால், இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான தேவையும் இராது. சேர்த்துக் கொள்வதில் சிரமமும் இராது. சமாதானத்தில் அரசாங்கத்திற்கு அவநம்பிக்கை இருக்கும் வரை இத்தகைய அவலங்களுக்கும். குழப்பங்களுக்கும் அது முகம் கொடுத்தே ஆகவேண்டும்.

# போதைப் பொருள் குற்றங்களுக்காக 47 பேருக்கு மரண தண்டனை விதிப்பு

## -80 பேருக்கு ஆயுள் தண்டனை

(கொழும்பு)

போதைப் பொருள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 47 பேரும், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 80 பேரும் சிறைச்சாலைகளில் இருப்பதாகப் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பூஜித ஜனசுந்தர தெரிவித்துள்ளார்.

மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களில் 38 பேர் இலங்கையர்கள். ஏனையோர் வெளிநாட்டவர்கள்.

இதேவேளை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 80 பேரில் 66 பேர் இலங்கையர்கள். ஏனைய 14 பேரும் வெளிநாட்டவர்கள்.

இந்த 112 பேரும் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தல், வியாபாரம் செய்தல், பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டுக்களின் பேரில் நீதிமன்றங்களினால் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# கட்சி புனரமைப்பு நடவடிக்கைகளில் அநுராவிற்கு முதலிடமளிக்க உத்தரவு

(கொழும்பு)

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சிறில.சு.கட்சியின் புனரமைப்பு நடவடிக்கைகளின் போது அநுரா பண்டாரநாயக்கவுக்கு முதலிடம் அளிக்குமாறு சனாதிபதி சந்திரிகா கட்சியின் செயலாளருக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்.

அநுரா கட்சியின் சிரேஷ்ட நிலை உறுப்பினர் என்ற வகையில் கட்சிப் புனரமைப்பு வேலைகளில் கட்டாயம் அவர் பங்கேற்கும் வகையில் அவருக்கு முதலிடம் வழங்க வேண்டும் என உத்தியோகபூர்வ மற்ற அறிவித்தலில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அவர் மேற்படி பணிகளில் ஈடுபட்டு வருகிறார். அத்துடன் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் கூட்டணியில் அவருக்கு சனாதிபதிக்கான வேட்புமனு தாக்கல் செய்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் இந்நடவடிக்கைகள் அமையும்.

அன்றியும் மகிந்த ராஜபக்ஷவுக்கு, இருக்கும் மக்களின் ஆதரவைக் குறைத்து அநுராவுக்கு ஆதரவைப் பெருக்கும் ஒரு நடவடிக்கையாகவும் இது அமைகிறது என அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் அநுரா பங்கேற்கும் கூட்டங்களில் பொ.ஐ.மு.செயலாளர் தி.மு.ஜெயரத்னவும் தவறாது பங்குபற்ற வேண்டும் எனவும் சனாதிபதி ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ரயில்-கார் மோதல் இருவர் உயிரிழப்பு

கண்டியிலிருந்து கொழும்பை நோக்கி வந்துகொண்டிருந்த இன்ரசிட்டி ரயிலுடன், ராகம எல்பிட்டியவிலிருந்து வந்து கொண்டிருந்த கார் ராகம ரயில் கடவையில் மோதியதில் 02 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. ரயிலுடன் மோதிய கார் சுமார் 200 கிலோ மீற்றர் தூரம் இழுபட்டுச் சென்றுள்ளது.

## கிழக்கிற்கான உள்ளூர் விமான சேவை இன்று முதல் ஆரம்பம்

கிழக்கு மாகாணத்திற்கான உள்ளூர் விமான சேவையொன்றை இன்று முதல் தனியார் நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கவுள்ளது. திருகோணமலைக்கான விமான சேவையே இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தினமும் இடம்பெறும்.

மட்டக்களப்பு அம்பாறைக்கான விமான சேவை எதிர்வரும் 28 ஆம் திகதி தொடங்கி வைக்கப்படவுள்ளது. இரத்மலானை விமான நிலையத்திலிருந்து இந்தச் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

# மாகாண சபை வேட்பாளர் நியமிப்பில் பிரதான இரு கட்சிகளும் மும்முரம்!

(கொழும்பு)

விரைவில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து ஐ.தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளன.

இதன்படி ஐ.தே.க.வினரின் விண்ணப்பங்கள் செப்ரெம்பர் 20ஆந் திகதிக்கு முன்பாகவும் சிறில.சு.க வினரின் விண்ணப்பங்கள் செப்ரெம்பர் 10ஆந் திகதிக்கு முன்பாகவும் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அக்கட்சிகளின் செயலாளர்கள் விண்ணப்பதாரிகளை அறிவுறுத்தியுள்ளனர்.

தற்போது மாகாண அமைச்சர்களிடமிருந்தும் போட்டியிட விரும்பும் கட்சியின் செயலணி உறுப்பினர்களிடமிருந்தும் விண்ணப்பங்களை எதிர்பார்ப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இவர்களுள் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்பட்டுத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படுவர். எனவும் கட்சிப் புனரமைப்புப் பணிகள் தற்போது தீவிரமாக நடைபெறுவதாகவும் அக்கட்சியின் செயலர் சிறிசேன தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கும் போது கடந்த ஒரு வருட காலப்பகுதியில் கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கை மூலம் 17 பேரைக் கட்சி நீக்கியிருப்பதாகவும் மேலும் தேவை ஏற்படின் இவ்வாறானவர்கள் நீக்கப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஆசிய-உலக கிரிக்கெட் அணிகள் நெதர்லாந்தில் மோத ஏற்பாடு

ஆசிய-உலக கிரிக்கெட் அணிகள் பங்குபற்றும் போட்டியொன்று எதிர்வரும் அக்டோபர் மாதம் 4ம்,5ம் திகதிகளில் நெதர்லாந்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் மூடப்பட்ட அரங்கொன்றில் நடைபெறும். தலா 30 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் துடுப்பாட்ட வீரர் அரங்கின் மேல்மாடிக்குப் பந்தை அடித்தால் 8 ஓட்டங்களும் கூரையில் பந்து பட்டால் 10 ஓட்டங்களும் பெறுவார்.

இப்போட்டிகளுக்கான ஆசிய அணியில் இந்தியாவின் யுவராஜ்சிங் ஜவகல் ஸ்ரீநாத்,பாகிஸ்தானின் முஸ்தபா அகமட் அஸார் மஹ்மூத் ஆகியோரும் உலக அணியில் மார்க்வோ,ஜொன்ரி றொட்ஸ், லான்ஸ் குளுனர் அலன் டொனால்ட், பிரைன் லாறாவுடன் பல முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.




## மெய்ன்ஸ் கிளாசிக் செஸ் தொடர் ஆனந்த்-போல்கர் சமநிலையில்

மெய்ன்ஸ் கிளாசிக் செஸ் தொடரில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்தும் ஹங்கேரியின் வீராங்கனை ஜூடித்போல்கரும் கடுமையான போட்டியில் விளையாடுகின்றனர். இத்தொடரில் 4ஆவது சுற்றில் இருவரும் 2-2என்ற சமநிலையில் இருக்கின்றனர்.

மொத்தம் எட்டுச்சுற்றுக்கள கொண்ட இத்தொடரில் அதிக புள்ளிகளைப்பெறுவோருக்குச் சம்பியன் பட்டம் கிடைக்கும். 03 போட்டிகளில் விளையாடிய ஆனந்த் வெற்றி வாய்ப்பை தவறவிட்டார். 4ஆவது சுற்றில் ஜூடித் தவறு செய்ததால் ஆனந்துக்கு வெற்றி வாய்ப்பாகியது.

## கார் விபத்தில் ஒருவர் பலி; கிரிக்கெட் வீரர் கைது!

(கொழும்பு)

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் வீர் ஒருவர் மோசமான கார் விபத்தொன்று தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுழல் பந்துவீச்சாளரான லொக்கு ஆராய்ச்சி கொழும்பு கடவத்த பகுதியில் தாய் ஒருவரையும் அவரது மகனையும் காரால் மோதியதை அடுத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# தப்பி ஓடிய சிறில. படையினருக்கு மீண்டுமொரு மன்னிப்புக்காலம்

## சிறிலங்கா அரசு தீர்மானம்

படையிலிருந்து தப்பிச் சென்றுள்ள படையினருக்கு மீண்டுமொரு முறை மன்னிப்புக் காலத்தையும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீண்டும் படையில் இணைந்து கொள்ள விரும்பாதவர்களுக்கு விடுதலைச்சான்றிதழ் வழங்கி அவர்களைப் பொது வாழ்வில் இணைத்துக் கொள்ளவும் காலஅவகாசம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, சிறிலங்காப் படைக்கு மேலதிகமாக 4000 படைகளைத் திரட்டும் நடவடிக்கை நேற்று முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைஅடுத்தமாதம்19ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக சிறிலங்காவின் படைத்துறைத் தலைமையகம் அறிவித்துள்ளது. அத்துடன் கடற்படைக்கும் படையினரின் தொண்டர் படை உறுப்பினர்களுக்கும் புதியவர்களை இணைத்துக் கொள்ளவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன படைகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் புதியவர்களுக்கு உயர்ந்த சம்பளமும் அதிகமான சலுகைகளும் வழங்க படைத்துறை நடவடிக்கை எடுத்துள்ளமை தெரிந்ததே.

இதேவேளை போர் நிறுத்த உடன்படிக்கைக் காலத்திலும் படையிலிருந்து அதிகாரிகளும் சிப்பாய்களும் பெருமளவில் தப்பிச் செல்வது குறித்து படைத் தலைமைப் பீடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. போர் நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்த காலத்தின் பின்னர் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் தப்பிச்சென்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

போர் நிறுத்தக் காலத்தில் இவர்கள் படையிலிருந்து தப்பிச் செல்வது குறித்து விசாரணை நடத்துமாறு படைத்துறை மீளாய்வுக் குழு படைத்தலைமையகத்திடம் கேட்டுள்ளது.இந்தவிசாரணையின் அடிப்படையில் படையிலிருந்து தப்பிச் செல்வோர் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. போக்குவரத்து வசதியின்மை,நீண்ட காலமாகப் பதவியுயர்வுகள் வழங்கப்படாமை போன்ற பல்வேறு காரணங்களினால் படையினரின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழை செம்மொழியாக அறிவிக்கக் கோரி புதுடில்லியில் தமிழறிஞர்கள் உண்ணாவிரதம்

(புதுடில்லி)

இந்தியாவில் நடுவண் அரசு தமிழ் மொழியை செம்மொழியாக அங்கீகரிக்க வேண்டுமெனக் கோரி நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்திய அரசின் செம்மொழிப் பட்டியலில் அரபு, பாரசீகம், கன்னடம் ஆகிய மொழிகள் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழையும் செம்மொழியாகச் சேர்க்க வேண்டும் என்பதே இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட தமிழ் அறிஞர்களின் கோரிக்கையாக அமைந்துள்ளது.

# உப்புவெளி கொலை தொடர்பாக விசாரணை நடத்தக் குழு

(திருமலை)

திருகோணமலை உப்புவெளி யில் கடந்தவாரம் இரண்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவினால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவினர் தமது விசாரணைகளை ஆரம்பிக்கும் நோக்கில் திருகோணமலைக்குச் சென்றுள்ளனர். பொலிஸ் அதிகாரி கிளமன் சில்வா தலைமையிலான குழுவினரே இவ்விசாரணைகளை மேற்கொண்டு நான்கு நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த இரண்டு இளைஞர்களும் உந்துருளி ஒன்றில் 80 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர் என்று இதற்கான காரணம் என்ன என்றும் பொலிசார் ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

# அடுத்தவாரம் வருகை

மனிதவுரிமைகள் தொடர்பான விடயங்களை ஆராயும்முகமாக சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி ஒருவர் இலங்கைக்கு வரவுள்ளார். அடுத்த வாரம் சிறிலங்கா வரும் இப்பிரதிநிதி அரச தரப்பினரையும், விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளதாக சிறிலங்கா அரச அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார். அண்மைக்காலத்தில் இடம் பெற்றுவரும் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக இச்சந்திப்புக்களின் போது ஆராயப்படவுள்ளது.

## இடைக்கால நிர்வாகம் தொடர்பாக

# ஐ.தே.க.முஸ்லிம் பா.உ.களுடன் பிரதமர் ரணில் ஆலோசிப்பார்

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சிறிலங்காப் பிரதமர் ஆலோசனை நடத்தத் தீர்மானித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அந்தப் பகுதி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் குறித்து இந்த ஆலோசனை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தம்மைச் சந்திக்குமாறு பிரதமர் அழைப்புக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும் பட்சத்தில் முஸ்லிம் மக்களின்உரிமைகளுக்கு மதிப்பளித்து அதற்கேற்ற விதத்தில் அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும், வடக்குக் கிழக்கின் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

## இந்தியாவின்...

ணெய்க் குதங்களைக் கொடுக்க நடவடிக்கை எடுத் தபோது வெளிநாட்டில் வாய்மூடி மௌனமாக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் இன்று இந்தியாவின் நலன் குறித் துப் பேசுவது வேடிக்கையானது என்றும் இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொலிசார்..

பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு வேளைகளில் இப்பகுதி வீதிகளில் குடிவெறியில் கூத்தாடி சிங்களத்தில் கத்திக் குழறும் படையினர் அப்பகுதியிலுள்ள மக்களுடன் கலகத்திலும் ஈடுபடுகின்றனர். இவர்களது இச் செயல் தொடர்பாக இப்பகுதி மக்கள் கலாச்சாரத்தைப் பேணும் குழுவிடம் முறைப்பாடும் செய்துள்ளனர்.(33)

# மாட்டுவண்டிச்சவாரி

தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையில் கலைவாணி மாட்டு வண்டிச் சவாரித்திடலில் வட்டக்கச்சி ஜொனி விளையாட்டுக் கழகத்தினர் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியை நடத்தியுள்ளனர்.

மேற்படிபோட்டியானதுநேற்றுமுன்தினம் பி.ப. 3மணியளவில் ஆரம்பமானது. பொதுச் சுடரினை கல்மடுநகர் வலயப்பொறுப்பாளர் ராஜா ஏற்றி வைத்தார். தொடர்ந்து அகவணக்கத்துடன் போட்டிகள் ஆரம்பமாகின.

அ.பிரிவில் 08சோடிகாளைகளும். ஆ.பிரிவில் 09சோடிகளும், இ. பிரிவில் 08 சோடிகாளைகளும்,ஈ. பிரிவில் 09 சோடிகாளைகளும் போட்டியிட்டன. தொடர்ந்து பரிசில் வழங்கும் நிகழ்வும் சிறப்புற நடைபெற்றது. (12)

## இ.நி...

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபைத்தலைவர் ஒருவர் அடியாட்களை வைத்துத் தாக்கியுள்ளார். இதில் படுகாயமடைந்த மாணவி ஒருவர் பதுளை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என ஜே.வி.பி. மேலும் தெரிவித்துள்ளது.

## தமிழ்ச்செல்வன்..

நாடுகளிலுள்ள சட்டவல்லுனர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டு இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு குறித்து ஆராயப்படவுள்ளது. இச்சந்திப்பு 10 நாட்களுக்குப் பாரிசில் இடம் பெறவிருப்பதுடன், இதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் பிரான்ஸ் தூதரகம் மேற்கொண்டுள்ளது.

## படையினரின்...

கொடுப்பனவு உதவிகள் திருப்தி தரக்கூடியதாக இருக்கவில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நோர்வேக்குழு பாதுகாப்புவலயத்திற்குள் உள்ள வீடுகளின் எண்ணிக்கை, மற்றும் பாடசாலைகளின் எண்ணிக்கை என்பவற்றையும் அறிந்து கொண்டதுடன் மக்களின் கஷ்டங்களை நேரில் சென்று பார்வையிட்டுமுள்ளனர். (33)

## இரு...

காயங்கள் காணப்படுகின்றன. சடலங்களுக்கு 100 மீற்றர் தூரத்தில் ரீ.56 ரகத் துப்பாக்கியின் வெற்றுத் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிசார் விசாரணையின் பின் தெரிவித்துள்ளனர்.

## மதகொன்றில்...

பொலிசார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி சடலம் பிரேதப் பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவரது சடலம் காணப்பட்ட இடத்திற்கு அருகில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் ஒன்றும் இருப்பது குறிப்பிடத்தக்கது.(33)

# செப்ரெம்பர் முதல் வன்னியில் பொலித்தீன் பாவனைக்குத் தடை

## தமிழீழ சுகாதார சேவையினர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப் பிரதேசமெங்கும் பொலித்தீன் பாவனையை தடை செய்யும் பொருட்டு தமிழீழ சுகாதார சேவையினர் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

நீண்ட காலத்திற்குப் பின்னும் உக்கிஅழியாததும்,சூழலுக்கும் ஒவ்வாத ஒரு பொருளாகக் காணப்படும் பொலித்தீன் பாவனையை செப்ரெம்பர் மாதம் 01ம் திகதி முதல் தடை செய்யும் பொருட்டு வியாபார நிலையங்கள் தெருவோரங்களில் கச்சான், கடலை போன்ற தின் பண்டங்களை விற்பனை செய்யும் பொழுது பொலித்தீன் பைகளை பாவிப்பதை முற்றாகத் தவிர்க்குமாறும் பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக கடதாசிப் பைகளை பயன்படுத்துமாறு கேட்டுள்ளனர். இவ்வறிவித்தலை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர்.

(பா)

# யாழ். வீரசிங்கமண்டபம் குறித்து விபரம் சேகரிக்கும் கண்காணிப்புக்குழு

யாழ். வீரசிங்கம் மண்டபம் தொடர்பான விபரங்களைச் சேகரிக்கும் பணியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தீவிரமாகச் செயற்பட்டுவருகின்றது.

கடந்த 16ஆம் திகதி மேற்படி மண்டபத்தில் நடைபெற்ற 81 ஆவது கூட்டுறவு தினவிழாவில் தமிழீழ தேசியக்கொடியேற்றப்பட்டது தொடர்பாக இந்த விசாரணை நடைபெற்றுவருகிறது.

நேற்று காலை 10மணியளவில் யாழ். மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மாவை யாழ் செயலகத்தில் சந்தித்த இலங்கை போர்நிறுத்தக் குழுவின் அதிகாரி மேற்படி மண்டபம் எந்த அமைப்பின் ஆளுகையின் கீழ் உள்ளது? எனவும் அது ஒரு அரச சார்புடைய மண்டபமா? எனவும் விசாரித்துள்ளார். இதற்குப் பதிலளித்த மேலதிக அரசாங்க அதிபர் இக்கட்டடமானது அரசாங்கத்தினாலோ அல்லது அதனது ஆளுகையின் கீழோ நிர்வகிக்கப்படவில்லையெனவும்,இது கூட்டுறவுச் சபைக்குரிய கட்டடம் எனவும் ஆதாரங்களுடன் தெளிவு படுத்தினார்.

இதேவேளை மேற்படி விடயம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொது அமைப்புக்களும், அரசசார்பற்ற அமைப்புக்களும் கடும்கண்டனம் தெரிவித்துள்ளன.

ஏனெனில் தமிழ் மக்களால் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசியக் கொடியை எமது தாயக நிலமான யாழ். நிலத்திலே பறக்க விடுதல், போர் நிறுத்த மீறல் என நடவடிக்கை எடுக்கும் இக்குழு தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்து அடாவடித்தனங்களையும் புரியும் அரச படைகள் மீது எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு சமாதான காலத்திலும் படையினரின்அடாவடித்தனம் அதிகரித் துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். (33)

## -நெடுந்தீவில் பிடிக்கப்பட்ட-

# 60 இந்திய மீனவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை பிடிக்கப்பட்ட 60 இந்திய மீனவர்களும் இன்று ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளனர்.

நேற்றுமுன்தினம் 15மீன்பிடி இழுவைப் படகுகளில் வந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளையில் இவர்கள் நெடுந்தீவு மீனவர்களால் பிடிக்கப்பட்டு ஊர்காவற்றுறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்

இவர்கள் நேற்றுக் காலை ஊர்காவற்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் இழுவைப்படகுகளில் ஒன்று சேதமடைந்து பழுதடைந்துள்ளதால் அப்படகு நெடுந்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பாதுகாப்பில் உள்ளது. ஏனைய படகுகள் ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

# மலவாசலற்றுப் பிறந்த குழந்தைக்கு சத்திரசிகிச்சை

வட்டக்கச்சி வைத்தியசாலையில் மல வாசல் அற்ற நிலையில் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

கடந்த மாதம் 28ஆம் திகதியன்று வட்டக்கச்சியைச் சேர்ந்த பெண்மணியொருவருக்கு மலவாசல் அற்ற நிலையில் குழந்தை பிறந்துள்ளது. இந்த ஆண் குழந்தைக்கு இரண்டு, மூன்று பற்கள் முளைத்தபடியே இருந்துள்ளது. சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் நோக்குடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா கொண்டு செல்லப்பட்டு, கொழும்பு (பொரளை) வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை வெற்றிகரமாகப் பயனளித்துள்ளது. தற்போது குழந்தை சுகமாகவுள்ளது. (12)

## முஸ்லிம்..

வேண்டும். எழுந்தமானமாகப் புலிகள் மீது பழியைச் சுமத்திவிட்டு தப்பிக்கொள்ள முற்படக்கூடாது தமிழ், முஸ்லிம் மக்களிடையே தற்போது புரிந்துணர்வு வலுப்பெற்று வரும் நிலையில், மக்கள் இத்தீய சக்திகளின் ஏற்பாடு குறித்து விழிப்பாக இருக்கவேண்டும் உணர்ச்சிவசப்படாது. அமைதி காத்து தீய சக்திகளின் நோக்கத்தை முறியடிக்கும் அதேவேளை, தமிழ், முஸ்லீம் மக்களிடையே ஒற்றுமையை மேலும் வலுப்படுத்த அனைவரும் பாடுபட வேண்டுமென இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியாவில்..

பட்டுள்ளது. மேற்படி நிகழ்வு பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

## சூட்டுக்காயத்துடன்..

சிகே சிசில் குமார எதும் (வயது-22) படைச் சிப்பாயுடையது என இனங்காணப்பட்டுள்ளது.

சிறிலங்காப் படையினரின் 55ஆவது படைப் பிரிவின் ஆட்டிலறிப் படைப் பிரிவைச் சேர்ந்த இவரின் தலையில் ரீ.56 ரகத் துப்பாக்கிக் குண்டு காணப்பட்டது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிசாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து சாவகச்சேரி நீதவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் இப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்து மரண விசாரணைகளை மேற்கொண்டார். இதனையடுத்து அவரது சடலத்தை உறவினரிடம் அனுப்புவதற்கு உத்தரவிட்ட நீதவான் இச்சடலத்துடன் பொலிசாரைப் பாதுகாப்பாகச் செல்ல வேண்டும் எனவும், கொழும்புச் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேதப் பரிசோதனையின் பின்பே இச்சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அந்த மருத்துவப் பரிசோதனை அறிக்கை உடனடியாக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் கட்டளையிட்டுள்ளார். (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு அகஸ்ட் மாதம் 19ம் திகதி ...